*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Vol. 7 No. 03 (2026): March 2026*
www.tamilmanam.in

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIF Impact Factor3.5| Multidisciplinary

# Murugan and Mutthamizh: A Philosophical, Sociological, and Literary Analysis of the Arupadaiveedu through Thirumurugatrupadai

**Dr. Siva. Mullaimalar***,
Principal & Head of the Department of Tamil,
Imayam Arts and Science College, Vaniyambadi – 635751,
*Corresponding Author Email: mullaisegar.ma@gmail.com, Tel: 9080821893

## ABSTRACT

This research paper undertakes a detailed examination of the philosophical bond between "Murugan and Mutthamizh" as articulated in Nakkeerar's Thirumurugatrupadai, the first long poem of the Sangam literary anthology Pattupattu. The paper analyzes the connection between the components of Mutthamizh—Iyal (prose/poetry), Isai (music), and Nadagam (drama)—and the six sacred abodes (Arupadaiveedu) of Lord Murugan within literary, sociological, and philosophical contexts. Furthermore, it explains the evolution of Murugan worship through the framework of Sangam Tamil societal structure, archaeological evidence, and the literary conventions of Pattupattu, contrasting these findings with data from global research journals.

**Keywords:** *Thirumurugatrupadai, Mutthamizh, Nakkeerar, Arupadaiveedu, Sangam Era, Archaeological Evidence, Philosophical Analysis.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Vol. 7 No. 03 (2026): March 2026*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

# முருகனும் முத்தமிழும்: திருமுருகாற்றுப்படை வழி அறுபடை வீடுகளின் தத்துவார்த்த, சமூகவியல் மற்றும் இலக்கியப் பகுப்பாய்வு

***முனைவர். சிவ. முல்லைமலர்,** முதல்வர், தமிழ்த்துறை தலைவர், இமயம் கலை அறிவியல் கல்லூரி, வாணியம்பாடி - 635751 கைப்பேசி - 9080821893 mullaisegar.ma@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வுக் கட்டுரை, சங்க இலக்கியப் பத்துப்பாட்டுத் தொகுப்பின் முதலாவது நெடும்பாடலான நக்கீரரின் திருமுருகாற்றுப்படையில் விளங்கும் "முருகனும் முத்தமிழும்" என்ற தத்துவார்த்தப் பிணைப்பினை விரிவாக ஆராய்கிறது. முத்தமிழின் கூறுகளான இயல், இசை, நாடகம் ஆகியவற்றுடன் முருகப் பெருமானின் அறுபடை வீடுகளும் கொண்டுள்ள தொடர்பினை இலக்கிய, சமூகவியல் மற்றும் தத்துவப் பின்னணியில் இக்கட்டுரை பகுப்பாய்வு செய்கிறது. மேலும், சங்க காலத் தமிழ் சமூகத்தின் கட்டமைப்பு, தொல்லியல் சான்றுகள், மற்றும் பத்துப்பாட்டு இலக்கிய நெறிகள் ஆகியவற்றின் ஊடாக முருக வழிபாட்டின் பரிணாம வளர்ச்சியை இக்கட்டுரை உலகளாவிய ஆய்விதழ்களின் தரவுகளுடன் ஒப்பிட்டு விளக்குகிறது.

**குறிப்புச் சொற்கள்:**

திருமுருகாற்றுப்படை, முத்தமிழ், நக்கீரர், அறுபடை வீடு, சங்க காலம், தொல்லியல் சான்றுகள், தத்துவார்த்தப் பகுப்பாய்வு.

## 1. முன்னுரை

அஞ்சும் முகம் தோன்றின், ஆறுமுகம் தோன்றும்;
வெஞ் சமரில்,'அஞ்சல்' என வேல் தோன்றும்; - நெஞ்சில்
ஒரு கால் நினைக்கின், இரு காலும் தோன்றும்
'முருகா!' என்று ஓதுவார் முன் . . . .

தமிழின் தொன்மை வாய்ந்த வழிபாட்டு மரபில் முருகப் பெருமானுக்குரிய இடம் மிக உன்னதமானது. குறிஞ்சி நிலக் கடவுளாகிய "சேயோன்" என்ற பழங்குடி வழிபாட்டு வடிவத்திலிருந்து, செவ்வியல் இலக்கியங்களின் நாயகனாக விளங்கும் "முருகன்" வரையிலான பரிணாம வளர்ச்சி தமிழின் மொழியியல், இலக்கிய ஆளுமைகளுடன் நெருங்கிய தொடர்புடையது. இயல்பாகவுள்ள தமிழ் இயற்றமிழ்; அதனொடு இசை சேர்ந்தது இசைத்தமிழ்; அவ்விரு தமிழோடும் நடிப்புச் சேர்ந்தது நாடகத் தமிழ்; இம்மூன்று தமிழும் சேர்ந்தது "முத்தமிழ்" ஆகும்.

முத்தமிழின் முழு வடிவமாகவும் அறுபடை வீடுகளில் வீற்றிருப்பவனும் முருகப் பெருமானே ஆவான். நக்கீரரின் திருமுருகாற்றுப்படை, பக்தி இலக்கிய மரபிற்கு வழிகாட்டியாகவும் சைவத் திருமுறைகளில் பதினொன்றாம் திருமுறையாகவும் போற்றப் பெறுகின்றது. நக்கீரர் போற்றிய முருகன் திருமுருகாற்றுப்படையில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழாய் முத்தமிழாய் காட்சித் தருகிறான்.

பக்தர்களின் அச்சத்தை நீக்கி அருள்பாலிக்கும் முருகப் பெருமானின் தோற்றத்தையும் அவனது

, | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

திருவருளையும் பின்வரும் வெண்பா நயம்பட விளக்குகிறது:

அஞ்சும் முகம் தோன்றின், ஆறுமுகம் தோன்றும்; வெஞ் சமரில், 'அஞ்சல்' என வேல் தோன்றும்; -
நெஞ்சில் ஒரு கால் நினைக்கின், இரு காலும் தோன்றும் 'முருகா!' என்று ஓதுவார் முன்....

முருகா என்னும் திருநாமத்தை ஓதும் பக்தர்களின் முன்னிலையில், அச்சம் தரும் சூழல் ஏற்படும் போது, ஆறுதல் நல்கும் முகமாக ஆறுமுகக் கடவுள் தோன்றுவார். துன்பப்படும் போதும் போராடும்போதும் 'அஞ்சாதே' என்று சொல்லி, துன்பத்தினை வேரறுக்கும் அவனது வேல் தோன்றும். நெஞ்சில் ஒருமுறை நினைக்க, அவனது இரண்டு திருவடிகளும், காவடி சுமந்து வரும் அடியவர்களைக் காப்பாற்றும் தூண்களாகத் தோன்றி அருள்பாலிக்கும். முருகப் பெருமானின் திருவிளையாடல்களும், தோற்றமும் மனிதர்கள் வாழ்க்கையில் உணர்ந்து கொள்ள வேண்டிய மிக உன்னதமான வாழ்வியல் தத்துவங்களை உணர்த்துவதாக அமைந்துள்ளன.

**2. பத்துப்பாட்டு இலக்கியக் கட்டமைப்பும் திருமுருகாற்றுப்படையும்**

சங்க இலக்கியப் பத்துப்பாட்டுத் தொகுப்பில் முதலாவது நூலாகத் திருமுருகாற்றுப்படை விளங்குகிறது. பழந்தமிழரின் நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் மிகச் சிறந்த சான்றாக விளங்கும் பத்துப்பாட்டு நூல்களை முதன்முதலில் 1889 ஆம் ஆண்டில் உ. வே. சாமிநாதையர் முழுமையாகப் பதிப்பித்து வெளியிட்டார். பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் தனது "பத்துப்பாட்டு ஆராய்ச்சி" நூலில், பத்துப்பாட்டின் வரலாற்றுப் புவியியல் கூறுகளையும், கல்வெட்டுச் சான்றுகளையும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

பத்துப்பாட்டுத் தொகுப்பில் உள்ள பத்துப் பாடல்களின் ஒப்பீட்டுத் தரவுகள் பின்வரும் அட்டவணையில் தொகுக்கப்பட்டுள்ளன:

| **நூலின் பெயர்** | **ஆசிரியர்** | **அடிகளின் எண்ணிக்கை** | **பாட்டுடைத் தலைவன் / வள்ளல்** |
|---|---|---|---|
| திருமுருகாற்றுப்படை | நக்கீரர் | 317 | முருகன் |
| பொருநராற்றுப்படை | முடத்தாமக்கண்ணியார் | 248 | கரிகால் சோழன் |
| சிறுபாணாற்றுப்படை | நல்லூர் நத்தத்தனார் | 269 | நல்லியக்கோடன் |
| பெரும்பாணாற்றுப்படை | கடியலூர் உருத்திரங்கண்ணனார் | 500 | தொண்டைமான் இளந்திரையன் |
| முல்லைப்பாட்டு | நப்பூதனார் | 103 | பாண்டியன் நெடுஞ்செழியன் |
| மதுரைக்காஞ்சி | மாங்குடி மருதனார் | 728 | பாண்டியன் நெடுஞ்செழியன் |

, | Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm07032026

| நூலின் பெயர் | ஆசிரியர் | அடிகளின் எண்ணிக் கை | பாட்டுடைத் தலைவன் / வள்ளல் |
|---|---|---|---|
| நெடுநல்வாடை | நக்கீரர் | 188 | பாண்டியன் நெடுஞ்செழியன் |
| குறிஞ்சிப்பாட்டு | கபிலர் | 261 | ஆரிய அரசன் பிரகத்தன் |
| பட்டினப்பாலை | கடியலூர் உருத்திரங்கண்ணனார் | 301 | கரிகால் சோழன் |
| மலைபடுகடாம் | இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் | 583 | நன்னன் சேய் நன்னன் |

ஆற்றுப்படை என்பது 'ஆற்றுப்படுத்தல்' எனப் பொருள்படும். 'ஆறு' என்பது வழி; 'படுத்தல்' என்பது செலுத்துவது; அதாவது வறுமையில் வாடும் ஒரு கலைஞன், வள்ளலிடம் பரிசு பெற்றுத் திரும்பும்போது, வழியில் எதிர்ப்படும் மற்றொரு கலைஞனுக்குப் பரிசு பெற வழிகாட்டுவதாகும். ஆனால், திருமுருகாற்றுப்படையில் இவ்வியல்பானது தத்துவ ரீதியாக மாற்றமடைந்துள்ளது. இங்குப் பரிசு என்பது உலகியல் பொருள் அல்ல; மாறாக ஆன்ம விடுதலை (வீடுபேறு) ஆகும். ஆன்மாவானது (ஜீவாத்மா), குருவின் (நக்கீரர்) வழிகாட்டுதலுடன் பரம்பொருளை (முருகன்) சென்றடையும் ஆன்மீக நெறியாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

**3. சங்க காலச் சமூகமும் தொல்லியல் சான்றுகளும்**

சங்க காலத் தமிழ் சமூகத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, வழிபாட்டு முறைகள் மற்றும் பண்பாட்டுக் கூறுகளைப் பல்வேறு தொல்லியல் கண்டுபிடிப்புகள் உறுதி செய்கின்றன. சங்க கால மக்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு, நெய்தல் தொழில், வேட்டையாடுதல் மற்றும் நெசவுத் தொழில் போன்றவற்றைத் தங்களின் முதன்மைத் தொழில்களாகக் கொண்டிருந்தனர். பண்டமாற்று முறை பரவலாக நடைமுறையில் இருந்தது.

தமிழகத்தில் கண்டறியப்பட்ட பல்வேறு தொல்லியல் சான்றுகளும், இலக்கியத் தரவுகளுடனான அவற்றின் ஒப்பீடுகளும் பின்வரும் அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளன:

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Vol. 7 No. 03 (2026): March 2026*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*




| **தொல்லியல் தளம் / சான்று** | **கண்டறியப்பட்ட பொருட்கள் / சான்றுகள்** | **இலக்கிய மற்றும் வரலாற்றுத் தொடர்பு** |
|---|---|---|
| அரிக்கமேடு | ரோமானிய மட்பாண்டங்கள், மணிகள், செங்கல் கட்டமைப்புகள், கிடங்குகள் | யவனர்களுடனான கடல்வழி வணிகத் தொடர்பு மற்றும் பட்டினப்பாலை சான்றுகள் |
| கொற்கை | முத்துக்குளித்தல் சான்றுகள், பழங்காலக் குறியீடுகள் | பாண்டிய நாட்டுத் துறைமுக நகரப் பண்பாடு மற்றும் சங்க இலக்கிய நெய்தல் திணைப் பாடல்கள் |
| மாங்குளம் கல்வெட்டு | தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட குகைப் படுக்கைகள் | சங்க காலப் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் மற்றும் சமண முனிகளின் வாழ்விடம் |
| ஜம்பைக் கல்வெட்டு | அதியமான் நெடுமான் அஞ்சி பற்றிய பிராமி கல்வெட்டு | புறநானூற்றுப் பாடல்கள் மற்றும் அதியமானின் கொடைத் திறன் |
| வேள்விக்குடி செப்பேடுகள் | முதுகுடுமிப் பெருவழுதியின் நிலக்கொடை ஆவணங்கள் | சங்க காலப் பாண்டிய மன்னர்களின் வரலாற்றுத் தொடர்ச்சி மற்றும் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட கொடைகள் |

சங்க காலத் தமிழ் சமூகம் இயற்கை வழிபாட்டையும், நடுகல் வழிபாட்டையும் முதன்மையாகக் கொண்டிருந்தாலும், மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தில் முருக வழிபாடு (சேயோன் வழிபாடு) மிக ஆழமாக வேரூன்றியிருந்தது. நெடுநல்வாடை போன்ற சங்க இலக்கியங்கள் போர்க்களத்திற்குச்

,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

செல்லும் தலைவனை வெற்றிக்காக வழிபடும் வெறியாட்டு மரபினைக் குறிப்பிடுகின்றன.

**4. முத்தமிழ் முருகனின் முதல்படை வீடு: திருப்பரங்குன்றம்**

முதல்படை வீடான திருப்பரங்குன்றம், முருகன் சூரபத்மனைப் போரில் வென்ற பின்னர், இந்திரன் தன் மகள் தெய்வானையை மணக்கோலத்தில் அவனுக்குத் தந்தருளிய திருத்தலமாகும். இங்கு சிவபெருமான் மலைவடிவில் அருள்பாலிக்க, முருகன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிப்பது தனிச்சிறப்பாகும்.

**4.1. தெய்வானையின் கணவன் (பாடல் வரிகள் 1 – 6)**

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடல் கண்டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன் தாள்,
செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை,
மறு இல் கற்பின் வாணுதற் கணவன்; (1 – 6)

**பொருள் விளக்கம்:** உலகம் விரும்பி மகிழ்ந்து வாழ்த்துமாறு, இருளை நீக்கி வெளிச்சம் தரும் காலைக் கதிரவன் கடல் அலைகளின் மேல் எழுந்து வலப்பக்கமாக வலம்வரும் கண்கொள்ளாக் காட்சியைப் போல முருகன் காட்சியளிக்கிறான். அவனது திருவருள் ஒளி தடை ஏதுமின்றி, மனித அறிவுக்கு எட்டாத தொலைவிடத்திலும் காலவெள்ளத்திலும் பாய்கிறது. துன்புறுவோரைக் காப்பதே முருகனின் மதக்கொள்கையாகும். அவனது திருவடிகள் தன்னை எதிர்த்த தீமைகளை மிதித்துத் தேய்க்கும் வன்மை கொண்டவை. மழை மேகம் போல் தடையின்றி வழங்குவது அவனது திருக்கரங்களாகும். களங்கமில்லாத கற்புநெறியினளாகிய தெய்வானைக்கு அவன் கணவன் ஆவான்.

திருப்பரங்குன்றத்தில் முருகப் பெருமானை நாடிவரும் பக்தர்களுக்கு இயல்பாக அவனது அருளைத் தருவது "இயற்றமிழ்" ஆகும். பக்தர்கள் போற்றிப் பாடும் பக்திப் பாடல்கள் "இசைத்தமிழாகவும்", தன் திருவிளையாடல் எனும் நாடகத்தை மக்களுக்குக் காட்டுவதில் அவன் "நாடகத் தமிழாகவும்" விளங்குகிறான்.

**5. முத்தமிழ் முருகனின் இரண்டாம் படைவீடு: திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)**

இரண்டாம் படைவீடான திருச்செந்தூர் கடலோரத்தில் அமைந்துள்ளதால் 'திருச்சீரலைவாய்' என்றும், 'ஜயந்திபுரம்' என்றும் அழைக்கப்படுகிறது. இங்கு முருகப் பெருமான் சூரபத்மனை அழித்ததாக கந்தபுராணம் கூறுகிறது. இத்தலம் குரு தத்துவத்தின் இருப்பிடமாகவும் விளங்குகிறது.

**5.1. ஆறுமுகன் யானை மேல் வருதல் (பாடல் வரிகள் 78 - 82)**

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்......
கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்டு....(78 - 82)

**பொருள் விளக்கம்:** எமனைப் போன்ற பேராற்றலும், புயல் காற்று வீசுவதைப் போன்ற வேகமும் கொண்ட யானையின் மீது முருகன் வீற்றிருக்கிறான். அதன் நெற்றியில் போர்க்களத்து அம்பின் வடுக்களும், வாடாத மாலைகளும், நெற்றிப் பட்டமும் (ஓடை) விளங்குகின்றன. அதன் இரு மருங்கிலும் தொங்கும் மணிகள் ஓயாது ஒலிக்கின்றன.

, | Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm07032026

**5.2. ஆறுமுகங்களின் இயல்புகள் (பாடல் வரிகள் 83 - 103)**

ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப....(85)

**பொருள் விளக்கம்:** முருகன் தன் தலையில் முடி சூடிக்கொண்டிருந்தான். அந்த முடியில் ஐந்து முகப் பட்டை தீட்டிய திருமணி பதிக்கப்பட்டிருந்தது. பொன்முடியில் நீலநிற மணியின் ஒளி முரணியிருந்தது (பொன்னிறத்தில் நீலநிறம் முரண்). இது அவன் தலைக்குப் பொலிவைத் தந்தது.

நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்

**பொருள் விளக்கம்:** வகைப்படுத்திப் பொன்னால் செய்த குண்டலங்களை அவன் தன் காதுகளில் அணிந்திருந்தான். அவை சிரித்த வண்ணம் தொங்கி ஆடிக் கொண்டிருந்தன. அவனது முகமாகிய வான மதியத்தைச் சூழ்ந்து அகலாதிருக்கும் விண்மீன் கூட்டம் போல் குழைமணிகளும் முடிமணிகளும் ஒளியுடன் விளங்கின.

தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
மனனேர்பு எழுதரு வாள்நிற முகனே....(90)

**பொருள் விளக்கம்:** ஒளி பொருந்திய அவனது முகம் நம் மனவயலை உழுது, தன் அழகைக் காட்டி எழுச்சி ஊட்டிக்கொண்டிருக்கிறது. யாருக்கும் துன்பம் தரக்கூடாது என்னும் தன் கொள்கைக்கு ஏற்பத் தொழிற்பட்டு, நம் எண்ணத்தை முடித்துத் தர அவன் முகம் மலர்ந்துகொண்டிருக்கிறது.

மாயிருள் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுக மொருமுக
மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே
யொருமுக மந்திர விதியின் மரபுளி வழாஅ....(95)
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே ஒருமுக
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே ஒருமுக
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே ஒருமுக....(100)
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே
ஆங்குஅ மூவிருமுகனு முறைநவின் றொழுகலின்....

**பொருள் விளக்கம்:** உலகம் களங்கம் இல்லாமல் விளங்குவதற்காக ஒரு முகம் கதிரொளிகள் பலவற்றைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. ஆர்வம் கொண்டவர்கள் புகழ்வதால் விருப்பத்தோடு மழைபோல் ஒழுகி, அவர்களுக்குத் தன்மீது உள்ள காதலாலும் மகிழ்ந்து அவர்களுக்கு ஒரு முகம் வரம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மரபிலிருந்து வழுவாத அந்தணர் மந்திரம் சொல்லிச் செய்யும் வேள்வியை ஒரு முகம் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது. இருளில் ஒளிதரும் திங்களைப் போல ஒரு முகம் பிறவற்றை யெல்லாம் விளங்கும்படி செய்து கொண்டிருக்கிறது. எதிர்ப்போரைப் போரிட்டு வென்று ஒரு முகம் களவேள்வி செய்து கொண்டிருக்கிறது. களவு மனைவி வள்ளியைப் பார்த்து ஒரு முகம் சிரித்துப் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறது.

**5.3. பன்னிரு கைகளின் தொழில்கள் (பாடல் வரிகள் 104 - 118)**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு....
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒருகை
உக்கம் சேர்த்தியது ஒருகை நலம்பெறு
கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயதொருகை
அங்குசங் கடாவ ஒருகை இருகை....
ஐயிரு வட்டமொடு எஃகுவலந் திரிப்ப
ஒருகை மார்பொடு விளங்க ஒருகை ஒருகை
தாரொடு பொலிய ஒருகை கீழ்வீழ்
தொடியொடு மீமிசைக்கொட்ப ஒருகை
பாடின் படுமணி இரட்ட ஒருகை....
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய ஒருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட
ஆங்குஅப் பன்னிரு கையும் பாற்படஇயற்ற....

**பொருள் விளக்கம்:** சந்தனப் பூச்சோடு முத்தாரம் தொங்கும் அவன் மேனியில் செம்புள்ளிகள் காணப்பட்டன. அவை அவன் வாங்கிக் கொண்ட தழும்புகள். வளம் மிக்க அவனது இரண்டு தோள்களில் பன்னிரண்டு கைகள் உள்ளன. மாம்பழத்திற்காக விண்ணில் சென்று வந்தபின் ஒரு கை தன் அண்ணனிடம் ஏந்தியது. ஒரு கை தன் தலையின்மேல் வைத்துக் கொண்டிருக்கிறது. ஒரு கை தன் தொடை ஆடையின்மேல் உள்ளது. ஒரு கை தன் யானைமேல் அங்குசத்தை வீசிக்கொண்டிருக்கிறது. இரு கைகளில் ஒன்று கேடயத்தையும், மற்றொன்று வேற்படையினையும் வலப் பக்கம் நோக்கிச் சுழற்றிய வண்ணம் உள்ளது. மார்பில் ஒரு கை. ஒரு கையில் மாலை. ஒரு கையில் வளையல். ஒரு கையில் மணி. ஒரு கை மழை பொழிகிறது. ஒரு கை தன்முன் நடனமாடும் வானர மகளிர்க்கு மணமாலை சூட்டிக் கொண்டிருக்கிறது.

### 5.4. ஆறுமுகன் வந்தருளியிருக்கும் காட்சி (பாடல் வரிகள் 119 - 125)

அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந் திசைப்ப வால்வளை ஞரல....
உரந்தலைக் கொண்ட உருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பஆ றாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச்சேறலும் நிலைஇய பண்பே அதான்று....

**பொருள் விளக்கம்:** பன்னிரண்டு கைகளும் பல்வேறு செயல்களைச் செய்து கொண்டிருக்கும்போது அவனைச் சுற்றிப் பல முழக்கங்கள் எழுகின்றன. கொம்பு, சங்கு, முரசம் முதலான பல்வேறு இசைக் கருவிகள் முழங்குகின்றன. அவனது கொடியிலிருக்கும் மயில் அகவுகிறது. இவற்றிற்கு இடையே திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூரிலிருந்து விசும்பு (வான்) வழியாக விரைந்து செல்ல அவன் திட்டம் தீட்டுகிறான். அவன் செல்வதற்கு முன் நீ அவனிடம் சென்றால் அவனது அருளைப் பெற்று விடலாம்.

திருச்செந்தூரில் முருகப் பெருமானை நாடிவரும் பக்தர்களுக்கு இயல்பாக அவனது அருளைத் தருவது "இயற்றமிழாகவும்", பக்தர்கள் போற்றிப் பாடும் பக்திப் பாடல்கள் "இசைத்தமிழாகவும்", நாடகம் ஆடும் சூரன் பத்மனைப் போன்றவர்களுக்கு எல்லாம் அவன் "நாடகத் தமிழாகவும்" விளங்குகிறான்.

, | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

### 6. முத்தமிழ் முருகனின் மூன்றாம் படைவீடு: திருவாவினன்குடி (பழநி)

மூன்றாம் படைவீடான பழநி, சித்தர்கள் வாழ்ந்த புண்ணிய பூமியாகும். பழநி முருகர் சிலை போகர் சித்தரால் நவபாஷாணத்தால் உருவாக்கப்பட்டது. ஞானப்பழம் அடைய வேண்டிய போட்டியில், தமையன் பிள்ளையாருடன் தோற்ற கோபத்தில் பழநியில் தண்டாயுதபாணியாகக் காட்சி தருகிறார். இவரின் தோற்றம் உலக உண்மைகளை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது. இங்கு அபிஷேகம் செய்யப்பட்ட பஞ்சாமிர்தம், பால், தீர்த்தம் போன்றவற்றை பிரசாதமாகச் சாப்பிட்டால் சகல நோய்களும் தீரும்.

#### 6.1. தேவர்கள் வருகின்ற காட்சி (பாடல் வரிகள் 160 - 174 & 119 - 125)

பகலிற் றோன்றும் இகலில் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்....(160 - 168)
மீன் பூத்தன்ன தோன்றலர் மீன் சேர்பு
வளி கிளர்ந்தன்ன செலவினர் வளியிடைத் 170
தீ எழுந்தன்ன திறலினர் தீப்பட
உரும் இடித்தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில் தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்து உடன் காண (169 – 174)
உரந்தலைக் கொண்ட உருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பஆ றாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச்சேறலும் நிலைஇய பண்பே அதான்று....(119 - 125)

**பொருள் விளக்கம்:** அவனைக் காண வருவோர் பாகுபாடோ வேறுபாடோ இல்லாமல் ஒன்றாகக் கூடிக் கண்டு களித்தனர். முருகனும் பாகுபாடின்றி காட்சி தந்து கொண்டிருந்தான். மக்களிடம் மனம், மொழி, செயல், இயல்பு என்ற நால்வேறு இயற்கைப் பாங்குகள் உண்டு. 11 வகைத் தேவர் (மருத்துவர்), 18 வகைத் தேவர் என்னும் பாகுபாடுகளும் உண்டு. எல்லாருமே உயர்நிலை உலகம் பெறுவதற்காக வானத்தில் மீன் பூத்திருப்பது போல் தோன்றி முருகனை வழிபட்டனர். இவர்கள் காற்றைப்போல் விரைந்து செல்லக் கூடியவர்கள்; தீயைப்போல் அழிக்கும் திறம் பெற்றவர்கள். முருகன் பெயரை மின்னலில் தோன்றும் இடியைப்போல் முழங்கினர். வரிசை முறையில் காத்திருந்து தம் குறையைச் சொல்லி வரம் பெற வேண்டி அந்தரத்திலும் சுழன்று வந்து கொண்டிருந்தனர். இவர்களுக்கெல்லாம் தன் மனைவியோடு காட்சி தந்தவண்ணம் முருகன் ஆவினன்குடியில் சிலநாள் அசைந்தாடும் உரிமையும் உடையவன்.

பழநி ஆண்டவனை நாடிவரும் பக்தர்களுக்கு இயல்பாக அவனது அருளைத் தருவது "இயற்றமிழாகவும்", பக்தர்கள் போற்றிப் பாடும் திருப்புகழ் "இசைத்தமிழாகவும்", நாடகம் ஆடி அருளைத் தருவதில் பழனியாண்டவன் "நாடகத் தமிழாகவும்" விளங்குகிறான்.

### 7. முத்தமிழ் முருகனின் நான்காம் படைவீடு: திருவேரகம் (சுவாமிமலை)

தன்னைவிட தன் பிள்ளைகள் அறிவுடையவர்களாக இருப்பது தந்தைக்கு மகிழ்ச்சியைத் தரும். தன் பிள்ளையின் வாயால் பிரணவ மந்திரத்தின் பொருளைக் கேட்க பிள்ளையை குருவாக ஏற்று, தான் சீடனாக அமர்ந்து குருவின் விளக்கத்தைக் கேட்ட இடம் சுவாமிமலை. இதனால் இந்த சுவாமிமலை

, | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

முருகன் 'சிவகுருநாதன்' என்ற பெயரால் வணங்கப்பட்டு வருகின்றார்.

### 7.1. அந்தணர்கள் வழிபடும் முறை (பாடல் வரிகள் 177 - 189)

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை....
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல....(177 - 182)
ஒன்பது கொண்ட மூன்று புரி நுண் ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறு எழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப் பாடி
விரை உறு நறுமலர் ஏந்தி பெரிது உவந்து
ஏரகத்து உறைதலும் உரியன் அதாஅன்று (183 – 189)

**பொருள் விளக்கம்:** இருபிறப்பாளர் வழிபாடு இங்குச் சிறப்பு மிக்கது. இவர்கள் அறுவகைப்பட்ட சமய நெறிகளிலிருந்து வழுவாதவர்கள்; சிவன், பெருமாள் என்று இருவரை வழிபடும் பல்வேறு தொல்குடியைச் சேர்ந்தவர்கள். 48 ஆண்டு இளமையை இல்லறத்தில் கழித்த பின்னர் அவர்கள் அறம் சொல்லி முத்தீ வளர்க்கும் கொள்கையில் மூன்று வகைக் குறிக்கோள் உண்டு. இறந்தோருக்கும் இறைவனுக்கும் உணவு சமைப்பதே முத்தீ. பூணூலுக்கு முன், பூணூலுக்குப் பின் என்று அவர்களுக்கு இரண்டு பிறப்புகள் உண்டு. முப்புரிநூல் ஒன்பது இழை கொண்டது அவர்களின் பூணூல். இவர்கள் நல்ல நேரம் பார்ப்பவர்கள்; ஈர ஆடையை உடுத்திக்கொண்டு புலரவிடுபவர்கள். உச்சியில் கைகளைக் கூப்பித் தாம் வழிவழியாகச் சொல்லக் கேட்ட ஆறெழுத்து மந்திரத்தைத் தாமும் சொல்லி முருகனைப் புகழ்ந்து வாய்விட்டுப் பாடுவர். மணமிக்க மலர்களைத் தூவிப் பூசை செய்வர். இதனை விரும்பி முருகன் ஏரகத்தில் வாழ்தலும் உண்டு.

சுவாமிமலை முருகன் நாடிவரும் பக்தர்களுக்கு இயல்பாக அவனது அருளைத் தருவதில் "இயற்றமிழாகவும்", பக்தர்கள் போற்றிப் பாடும் பக்திப் பாடல்கள் "இசைத்தமிழாகவும்", நாடகம் ஆடி அருளைத் தருவதில் "நாடகத் தமிழாகவும்" விளங்குகிறான்.

### 8. முத்தமிழ் முருகனின் ஐந்தாம் படைவீடு: குன்றுதோறாடல் (திருத்தணி)

திருச்செந்தூரில் சூரனை வதம் செய்த முருகன் திருத்தணிக்குச் சென்று தன் கோபத்தைத் தணித்துக் கொண்டு சாந்தமானதால், 'தணிகை' என்று இந்த ஊருக்குப் பெயர் வந்தது. மேலும், வேடர் குலத்தில் பிறந்த வள்ளியை, அண்ணன் கணேசனின் உதவியுடன் காதல் திருமணம் செய்து கொண்ட இடம் திருத்தணி ஆகும். இந்த கோவில் அருணகிரிநாதர், முத்துச்சாமி தீட்சிதர் உள்ளிட்டோரால் பாடல் பெற்ற தலம்.

### 8.1. குன்றுதொறு ஆடலில் முருகன் (பாடல் வரிகள் 198 – 217)

விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கான்
குண்டு சுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலையுடை நறும்பூச்

செங்கால் மராஅத்த வால் இணர் இடை இடுபு
சுரும்பு உணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்து காழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைய்
செயலைத் தண் தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும் பல்லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகர் இல் சேவல் அம்
கொடியன் நெடியன் தொடி அணி தோளன்
நரம்பு ஆர்த்தன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன் நேர்பு துகிலினன்
முழவு உறழ் தடக் கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇ தலைத்தந்து
குன்றுதொறு ஆடலும் நின்றதன் பண்பே அதாஅன்று (198 – 217)

**பொருள் விளக்கம்:** வேலனுடன் சேர்ந்து மகளிரும் குரவை ஆடினர். அவர்கள் தம் கூந்தலை விரல்களால் கோதி உலர்த்திக் கொண்டனர். காட்டிலும் சுனையிலும் பூத்த பூமாலைக் கண்ணியைத் தலையில் சூடிக் கொண்டிருந்தனர். அணைத்துப் பின்னிய அவர்களின் கூந்தலானது பூங்கோதை இணைத்துப் பின்னப்பட்டிருந்தது. குல்லாத்தழை பூத்திருக்கும் வெண்கடம்பு, மரத்தளிர், மாந்தழை ஆகியவற்றைச் சேர்த்துக் கட்டிய தழையாடையை அவர்கள் தம் அல்குல் மறைய உடுத்தியிருந்தனர். வண்டு மொய்க்கும் நிலையில் அந்தத் தழையாடை புத்தம் புதிதாக இருந்தது. மயில் போன்ற அவர்களின் மடநடையோடு சேர்ந்து வேலன் குரவை ஆடினான். சிவந்த மேனி, சிவந்த ஆடை, காதில் அசையும் செயலையந்தளிர், இடுப்பில் கச்சு, காலில் கழல், தலையிலே வெட்சிப்பூக் கண்ணி, குழைந்திருக்கும் தலைமயிர், கொம்பு முதலான பல சிறு இசைக்கருவிகள், செம்மறியாட்டுக் கடாமீதும் மயில்மீதும் ஏறிய ஆட்டம், சேவல்கொடி, உயர்ந்த உருவம், தொடி அணிந்த தோள், யாழ் போன்ற குரலால் பலரும் பாடும் பாட்டு, உடம்பெல்லாம் புள்ளி போட்டுக் கொண்டிருக்கும் மேனி, குதிபுரள இடுப்பில் கட்டிய ஆடை, கை அடிக்கும் முழவோசைக் கேற்ப அடியெடுக்கும் நடை போன்ற கோலத்துடன், வேலனோடு சேர்ந்து மகளிரின் தோளைத் தழுவிக் கொண்டும், தலைமையேற்று முன்னே நின்றுகொண்டும் குன்றிருக்கும் இடமெல்லாம் கூடியாடி நிற்றலும் அவன் பண்பாடாகும்.

திருத்தணி முருகன் நாடிவரும் பக்தர்களுக்கு இயல்பாக அவனது அருளைத் தருவதில் "இயற்றமிழாகவும்", பக்தர்கள் போற்றிப் பாடும் பக்திப் பாடல்கள் "இசைத்தமிழாகவும்", நாடகம் ஆடி அருளைத் தருவதில் "நாடகத் தமிழாகவும்" விளங்குகிறான்.

**9. முத்தமிழ் முருகனின் ஆறாவது படைவீடு: பழமுதிர்சோலை**

அறுபடை வீடுகளில் கடைசியாக வரும் படைவீடு அழகர் மலை மீது இருக்கக் கூடிய சோலைமலையாகும். இங்கு ஔவை பாட்டியிடம் "சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று வினவி, அவனது ஞானத் திருவிளையாடலால் உலக வாழ்க்கைக்குக் கல்வி அறிவோடு மெய்ஞான அறிவும் தேவை என்பதை உணர்த்திய இடம் இதுவேயாகும்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

### 9.1. பரம் பொருளின் பேராற்றலைப் போற்றும் பாமாலை (பாடல் வரிகள் 250 - 277)

ஆண்டாண்டு ஆயினும் ஆகக் காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ....
ஆல்கெழுகடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ....
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறன் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ....
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொறு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்து மிசைபே ராள....
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்து
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி....
போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யானறி அளவையின் ஏத்தி ஆனாது....

**பொருள் விளக்கம்:** ஆங்காங்கே அவன் முந்துறக் கண்டால் அவன் புகழைச் சொல்லி ஏத்தவேண்டும்; கையால் தொழுது பரவவேண்டும்; அவனது காலில் விழுந்து வணங்கவேண்டும். இமயமலையில் நீலம் பூத்திருக்கும் சுனையாகிய சரவண பொய்கையில், ஐவருள் ஒருவராகிய வருணன் தன் உள்ளங்கையில் ஏற்றுக்கொள்ள, முருகன் பிறந்தான். வானத்து விண்மீன்களில் கார்த்திகை மீனாக இணைந்து இடம் பெற்றிருக்கும் ஆறு மீன்களும் அவனைப் பெற்ற ஆறு தாய்மார் ஆயினர். சிவபெருமானின் புதல்வனே, பார்வதியின் மைந்தனே, பகைவர்களின் காலனே, கொற்றவையின் சிறுவனே. வானோர் வணங்கும் விற்படையின் தலைவனே, மணமாலை பூண்ட மார்பினை உடையவனே, எல்லா நூல்களையும் அறிந்த புலவனே. போரில் ஒருவனாகவே போரிட்டு வெற்றி காணும் மள்ளனே, அந்தணர்களின் செல்வமே, அறிவறிந்தோர் சொல்லின் மாலையாகித் திகழ்பவனே. காதல் மங்கையர்களுக்கெல்லாம் கணவனானவனே, வீர மைந்தர்களுக்கு ஏறானவனே, வேலேந்திய தடக்கையில் சால்பேந்திய செல்வனே. கிரவுஞ்ச

மலையைக் கொன்ற வெற்றியோடு குறிஞ்சி நிலத்திற்கு உரிமை பூண்ட தலைவனே, பலரும் புகழும் நன்மொழிப் புலவர்க்கெல்லாம் ஏறே. விரும்பியவர்களுக்கு விரும்பியது தரும் புகழிசையின் பேராளனே, துன்புறுவோருக்கு அளிசெய்து துன்பம் போக்குவதற்கென்றே கையில் கங்கணப் பொலம்பூண் பூண்டுள்ள சேயோனே. மற்போரில் வென்று ஆடும்போது பரிசில் வேண்டுவோரையெல்லாம் மார்பில் தாங்கும் உதவியுருவம் கொண்டு உயர்ந்து நிற்கும் வேளே, பெரியோரெல்லாம் போற்றிப் புகழும் பெரும்பெயர் இயவுளே. சூரபத்மன் என்னும் அச்சக்காரனை அழித்த போர்வீரனே, அறிவுத் தலைவனாகிய குரிசிலே என்றெல்லாம் எனக்குத் தெரிந்த அளவில் போற்றிப் புகழ்ந்து நிறைவடையாதவனாய் இருக்கிறேன்.

பழமுதிர்சோலையில் ஒளவையுடன் நிகழ்த்திய உரையாடல் வழியாக அறிவின் உன்னத எல்லையைக் காட்டுவதால் இவன் "இயற்றமிழ்" ஆகிறான். சிலம்பாற்று நீரொலியின் பின்னணியில் அடியவர்கள் பாடும் பாடல்களில் இவன் "இசைத்தமிழ்" ஆகிறான். சுட்ட பழம் என்ற திருவிளையாடல் மூலம் ஆன்மீகத் தத்துவத்தை உணர்த்திய நாடகக் கோலத்தால் இவன் "நாடகத் தமிழ்" ஆகிறான்.

## 10. முடிவுரை

நக்கீரரின் திருமுருகாற்றுப்படை வெறும் பக்திப் பனுவலாக மட்டும் அன்றி, தமிழின் முத்தமிழ்க் கோட்பாட்டை மெய்ஞானத் தத்துவத்துடன் இணைக்கும் மாபெரும் இலக்கியப் பாலமாகத் திகழ்கிறது. அறுபடை வீடுகள் ஒவ்வொன்றும் ஆன்மீகப் பயணத்தின் வெவ்வேறு நிலைகளையும், தமிழ் மொழியின் இயல், இசை, நாடகக் கூறுகளையும் தன்னுள் அடக்கியுள்ளன. தொல்லியல் மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் வழி தமிழரின் பழங்காலச் சமூகக் கட்டமைப்பில் முருக வழிபாடு கொண்டுள்ள ஆழமான வேர்களை இக்கட்டுரை உறுதி செய்கிறது.

## 11.தன்னாறிவிப்பு (Conflict of Interest Statement)

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியரான முனைவர் சி. முல்லைமலர், இக்கட்டுரையானது முற்றிலும் கல்வி, இலக்கியம் மற்றும் தத்துவப் பகுப்பாய்வு நோக்கத்தில் சுயாதீனமாக எழுதப்பட்டது என்பதைப் பிரகடனம் செய்கிறார். இக்கட்டுரையின் கண்டுபிடிப்புகள் அல்லது பகுப்பாய்வுகளில் எவ்விதமான நிதிசார்ந்த, வணிகரீதியான அல்லது தனிப்பட்ட நலன்களின் முரண்பாடும் (Conflict of Interest) இல்லை என ஆசிரியர் உறுதிபட அறிவிக்கிறார்.

## 12. துணைநூற்பட்டியல் (Works Cited)

[1.] அருணகிரிநாதர். கந்தர் அலங்காரம். வானதி பதிப்பகம், சென்னை.

[2.] அருணகிரிநாதர். கந்தர் அனுபூதி. வானதி பதிப்பகம், சென்னை.

[3.] அருணகிரிநாதர். திருப்புகழ். வானதி பதிப்பகம், சென்னை.

[4.] உ.வே. சாமிநாதையர், பதிப்பாசிரியர். பத்துப்பாட்டு – மூலமும் உரையும். கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1961.

[5.] கச்சியப்ப சிவாச்சாரியார். கந்தபுராணம். வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2015.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026*

[6.] கிருபானந்த வாரியார். கந்தபுராண விரிவுரை. குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், சென்னை.

[7.] சண்முகசுந்தரம், சு. தமிழக அறுபடை வீடுகள் – வரலாறும் சிறப்பும். தமிழக இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு, சென்னை.

[8.] நக்கீரர். திருமுருகாற்றுப்படை. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1970.

[9.] பாம்பன் சுவாமிகள். குமாரஸ்தவம். பாம்பன் சுவாமிகள் மகாசபை, சென்னை.

[10.] பாம்பன் சுவாமிகள். சண்முக கவசம். பாம்பன் சுவாமிகள் மகாசபை, சென்னை.

[11.] புலியூர்க் கேசிகன். திருமுருகாற்றுப்படை – தெளிவுரை. பாரி நிலையம், சென்னை, 2004.

[12.] மறைமலை அடிகள். தமிழர் மதம். மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2008.

[13.] மா. இராசமாணிக்கனார். தமிழர் நாகரிகமும் பண்பாடும். சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

[14.] மா. இராசமாணிக்கனார். பத்துப்பாட்டு ஆராய்ச்சி. சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

[15.] மு. வரதராசனார். தமிழ் இலக்கிய வரலாறு. சாகித்திய அகாதெமி, புது தில்லி, 2002.

[16.] வையாபுரிப்பிள்ளை, எஸ். பத்துப்பாட்டு – மூலமும் உரையும். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work